# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனம்
## (கூட்டிணைத்தல்)

**இலங்கை ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அசல ஜாகொடகே அவர்களால் 2013,
நவெம்பர் மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, ஒற்றோபர் மாதம் 28 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 275 ஆம் சட்டமூலம் ]**


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 5.00**

## இலங்கை ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனம் (கூட்டிணைத்தல்)

## இலங்கை ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான மன்றம் எனும் பெயரில் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதும் 1987 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிச் சட்டத்திற்கேற்ப இலக்கம் N(A) 1170 கீழ் உயர்தொழில்புரிவோரின் அமைப்பாக பதிவுசெய்ததுமான 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்படி இலக்கம் GA 635 இன்கீழ் மட்டுப்படுத்தப்பட்ட இலாபம் பெறாத உயர்தொழில்புரிபவர்களின் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றாக மீண்டும் பதிவுசெய்ததுமான இந்த நிறுவனமும் குறித்த நிறுவனத்தின் அங்கத்தவர்கள் ஏற்றுக்கொண்ட விதிகளுக்கு அமைய அதன் குறிக்கோள்கள் மற்றும் அத்துடன் தொடர்புடைய விடயங்களை வினைத்திறனுடன் செயற்படுத்தும் பணிகள் மிகத் தேவையாக உள்ளபடியாலும் ஆய்வுகள் மற்றும் அத்துடன் தொடர்புடைய தொழினுட்ப சேவைகளை நாட்டினுள் அதிகம் பரந்த அளவில் பிரசாரம் செய்வதற்கான மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவும் நிறுவனம் பொதுமக்களுக்கு பொறுப்பேற்கும் மற்றும் ஊடு தெரியும் தன்மையுடன் செயற்பட மேலும் உறுதிப்படுத்துதல் கட்டாயமாக உள்ளபடியால்

குறித்த நிறுவனம் எந்நோக்கத்திற்காகவும் காரியத்திற்காகவும் நிறுவப்பட்டதோ அந்நோக்கத்தையும் காரியத்தையும் இதுவரை காலமும் குறித்த நிறுவனத்தால் வெற்றிகரமாக செயற்படுத்தியும் நிறைவேற்றியும் வந்துள்ளபடியாலும், குறித்த நிறுவனத்தைக் கூட்டிணைக்குமாறு கோரப்பட்டுள்ளபடியாலும், அக்கோரிக்கையை நிறைவேற்றுதல் பொதுமக்களின் நன்மைக்குக் காரணமாகின்றபடியாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க இலங்கை ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என்றழைக்கப்படும்.

2-PL 007616 -45 (2013/10)

ஆய்வுக்கும் அபிவிருத்திக்கு மான நிறுவனத்தை கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் செயற்படுத்தல் ஆரம்பிக்கும் தினத்திலிருந்தும் மற்றும் அதற்குப்பின்னரும் (இங்கு இதற்குப் பின் நிறுவனம் எனக் குறிப்பிடப்படுகின்ற) ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தில் தற்போது உறுப்பினராக இருக்கின்றவர்களும் இதனால் கூட்டிணைக்கப்படுகின்ற நபர்களும், (இங்கு இதன் பின்னர் கூட்டுத்தாபனம் என குறிப்பிடப்படுகின்ற) இலங்கை ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனம் என்ற பெயரையும் அதன் மகுடத்தின்கீழ் தொடர்ச்சியாக நிலவும் கூட்டுத்தாபனமாக வேண்டும். மேலும், குறித்த பெயரின்கீழ், குறித்த கூட்டுத்தாபனத்தினாலும் அதற்கு எதிராகவும் எந்த ஒரு நீதிமன்றத்திலும் வழக்கு தொடர முடியும். பொதுவான இலச்சினையைக் கொண்டிருக்கும்போது அதனை உபயோகித்தலும், சுயவிருப்பத்தின்கீழ் அதனை மாற்றியமைக்கும், முழுமையான அதிகாரமும் பொறுப்பும் கூட்டுத்தாபனத்திற்கு உண்டு.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனத்தை கூட்டிணைத்தல் பின்வரும் பொது நோக்கங்களுக்காகவென இத்தால் வெளியிடப்படுகின்றது.

(அ) இலாபம் பெறும் நோக்கம் அற்ற ஆராய்ச்சி நிறுவனமாக இலங்கை ஆராய்ச்சிக்கும் அபவிருத்திக்குமான நிறுவனத்தை செயற்படுத்தல் ;

(ஆ) ஆராய்ச்சி அபிவிருத்தி, கல்விப் பயிற்சி மற்றும் பரப்புதல் ஆகிய துறைகளில் அபிவிருத்தியின்மூலம் ஆராய்ச்சியினதும் அபிவிருத்தியின் முன்னேற்றத்தை மேம்படுத்தலும் அதற்கு உதவுதலும் ;

(இ) ஆராய்ச்சி செயற்பாடுகளின் கட்டாய உள்ளடக்கமாக உயர்தரத்திலான ஆராய்ச்சி அறநெறிகளைப் பின்பற்றல், அதுபோன்றே மேம்படுத்துவதற்காக கல்வி பயிற்சியும் பரம்பலும் ;

(ஈ) நிறுவனத்தின் நோக்கங்களை இலங்கையிலும், வெளிநாடுகளிலும் பரப்புவதற்காக மாநாடுகள், சம்மேளனங்கள், கருத்தரங்குகள், செயற்களங்கள், கூட்டுக் கற்கைகள், பகிரங்க விரிவுரைகள், பொருட்காட்சிகள்

பயிற்சி வேலைத்திட்டங்கள் ஆகியவற்றிற்கு ஒழுங்கு செய்தல், நடாத்துதல், அனுசரணை வழங்கல் அதற்காக செய்திப்பத்திரிகைகள், பருவ சஞ்சிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், திரைப்படங்கள், வீடியோ நாடாக்கள், கசட் மின் தரவுகள் மற்றும் தகவல் தரவுகள் அடங்கிய உத்திகளை உற்பத்தி செய்தல் மற்றும் வெளியிடல் ;

(உ) குறுகியகால பாடநெறிகள், சான்றிதழ் பாடநெறிகள் மற்றும் டிப்ளோமா பாடநெறிகள் ஆகியவற்றை நடாத்துதல், கூட்டுத்தாபனத்தின் விதிகளில் குறிப்பிடப் பட்டுள்ள தேவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுபவர்களுக்கு டிப்ளோமாக்களையும் சான்றிதழ்களையும் வழங்கல் ;

(ஊ) உள்நாட்டு மற்றும் சர்வதேச உயர் புலமைப்பரிசில்கள், புலமைப்பரிசில்கள், திறமைச் சான்றிதழ்கள், உபகாரக் கொடைகள், மாணவர் உதவுதொகைகள், புலமைப் பரிசில்கள் மாணாக்கர் நிலை உட்பட விருதுகளை அளித்தல் மற்றும் நிறுவனத்தின் குறிக்கோள்களை செயற்படுத்துவதற்காக ஆராய்ச்சி செயற்றிட்டங்களை ஆரம்பித்தல் ;

(எ) ஆய்வு அபிவிருத்தி கல்வி, பயிற்சியையும் பரம்பலையும் அதிகரிப்பதற்காக ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களுடன் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படல் மற்றும் ;

(ஏ) நிறுவனத்தின் உறுப்பினர்களின் தொழில் விருப்பை மேம்படுத்தல் ;

(ஐ) நிறுவனத்தின் ஒரு பகுதியாக இதுவரை நடாத்திவந்த இலங்கை இரட்டை ஆவண அறையின் நிருவாகத்தை மற்றும் மேம்படுத்தலைப் போன்றே குறித்த தரவுகளஞ்சியங்கள் மற்றும் இரசாயனகூடம் மற்றும் ஆய்வுக் கூடத்தின் முழுமையான நிருவாகத்தையும் மற்றும் உரிமையையும் ;

(2) இப்பிரமாணத்தின் (1) ஆம் உப பிரமாணத்தில் திட்ட வட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை செயற் படுத்தும்போது இனம், சமயம், மொழி, குலம், ஆண் பெண் வேறுபாடு, அரசியல் கொள்கைகள் அல்லது பிறந்த இடம் பற்றிய வேறுபாடுகள் இன்றி அவற்றைச் செயற்படுத்த நிறுவனம் உறுதிசெய்தல் வேண்டும்.

நிறுவனத்தின் செயற் பாடுகளை முகாமைத்துவம் செய்யும் அதிகாரம்.

**4.** (1) நிறுவனத்தின் செயல்களை வருடாந்த பொதுக்கூட் டத்தில் மூன்றாண்டு காலத்திற்கு தெரிந்தெடுக்கப்படுகின்ற ஆகக்கூடியது ஏழுபேர் உறுப்பினர் தொகையைக்கொண்ட நிருவாகக் குழுவின்மூலம் இந்த சட்டத்தின் ஏனைய ஏற்பாடு களுக்கும் நிறுவனத்தில் தற்போது நடைமுறையிலுள்ள விதிகளுக்கும் ஏற்ப முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் முதலாவது நிருவாகக் குழுவின் மூன்றாண்டு காலம் அல்லது அவர்கள் எழுத்து மூலமாக பதவி விலகலை பொறுப்பு கொடுக்கும் வரை நிறுவனத்தில் பதவி வகிப்பார்கள்.

(2) இந்த சட்டத்தை செயற்படுத்தல் ஆரம்பிக்கும் திகதிக்கு முன்னரான திகதி வரையான திகதியில் நிறுவனத்தின் நிருவாகக் குழுவின் பதவி வகித்துக் கொண்டிருந்த இந்த சட்டத்தின் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த உறுப்பினர்களினால் நிறுவனத்தின் முதலாம் பொறுப்பாளர் சபை அமையும்.

நிறுவனத்தின் பொதுவான அதிகாரம்.

**5.** இச்சட்டத்தின் வேறு யாதாயினும் எழுத்துமூல சட்டத் திற்கும் ஏற்பாடுகளுக்கும் ஏற்ப நிறுவனத்தின் குறிக்கோள்களை அல்லது ஒரு குறிக்கோளை மேம்படுத்த அல்லது அடையச் செய்யத் தேவையான அல்லது எதிர்பார்க்கும் எல்லா செயல்கள் காரணங்கள் மற்றும் செயல்களைச் செய்தல், நிறைவேற்றுதல் மற்றும் செயற்படுத்தல் உட்பட பின்வருவனவற்றை நிருவாகம் செய்யும் அதிகாரம் நிறுவனத்திற்கு உள்ளது.

(அ) இலங்கை இரட்டை ஆவணஅறையின் முழுமையான உரிமை மற்றும் நிருவாகம் போன்றே பரம்பரையலகு ஆய்வகத்தின் உரிமை மற்றும் அதனை நிருவகிக்கும் அதிகாரம் ஆகியன உண்டு ;

(ஆ) நிறுவனத்தின் பணிகளுக்காக தேவைப்படுகின்ற அசையாத சொத்துக்களை சுவீகரிக்க, வைத்திருக்க, குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்க அல்லது கொடுத்தல், அடகு வைத்தல், விற்றல் அல்லது கைமாற்றல் அல்லது வேறுவகையில் கையாள, பிணைக்கு உட்படுத்தல் அல்லது கையுதிர்த்தல் ;

(இ) நிறுவனத்தின் பணிகளுக்காக தேவைப்படுகின்ற காணிகளை அல்லது கட்டடங்களை விலைக்கு வாங்க அல்லது கட்டுவதற்கு ;

(ஈ) நிறுவனத்தின் பணிகளுக்காக அரசின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கி அல்லது நிதி நிறுவனங்களிலிருந்து பணத்தைக் கடனாகப் பெற அல்லது பெற்றுக் கொள்ள உதவிகளையும் நன்கொடைகளாகப் (உள் நாட்டு அல்லது வெளிநாட்டு) பெற்றுக்கொள்ளல் ;

(உ) நிறுவனத்தின் பணிகளுக்காக நிருவாகக் குழுவின் உறுப்பினர்கள் பொருத்தமானது எனக் கருதும் எந்த ஒரு வங்கியிலும் நிதியை முதலீடு செய்ய நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்குகளை நடைமுறைப்படுத்தல் ;

(ஊ) அங்கத்துவ பணம், உதவுதொகைகள், கொடைகள் நன்கொடைகள் எல்லா வகையான அன்பளிப்புக்களை சேகரிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் ;

(எ) நிறுவனத்தின் குறிக்கோள்களுக்காக யாராவது நபர் யாதாயினும் நிறுவனம் அல்லது தனியார் குழுவொன்று ஆகியவற்றுடன் ஒப்பந்தங்களுக்கு வருதல் வேலை ஒப்பந்தங்களுக்கு வருதல் ;

(ஏ) வேறு நிறுவனங்கள் அல்லது நபர் அல்லது நபர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது வழங்கிய ஆய்வு செயற்றிட்டங்களை ஒழுங்கமைத்தல் அல்லது நிறைவேற்றுதல் ;

(ஐ) நிறுவனத்தின் குறிக்கோள்களை செயற்படுத்துவதற்காக நிறுவனத்தின் அதிகாரிகளையும் ஊழியர்களையும் நியமித்தல், சேவையில் ஈடுபடுத்தல், இடமாற்றம் செய்தல், அவர்களது விடயத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைகளைப் பேணிவரல் மற்றும் வேலையிலிருந்து நீக்குதல் ;

(ஒ) நிறுவனத்தின் பணிகளுக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஊழியர்களை பயிற்றுவித்தல் ; மற்றும்

(ஓ) நிறுவனத்தின் குறிக்கோள்களை தக்கவாறும் பயனுறுதியுள்ளவாறும் செய்வதற்காக தேவையான அல்லது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வேறு எல்லாவற்றையும் செய்வதற்கு நிறுவனத்திற்கு அதிகாரம் உள்ளது.

நிறுவனத்தின் சட்டங்கள்.

**6**. (1) நிறுவனத்தினால் யாதாயினும் பொதுக்கூட்டத்தில் அதற்கு வந்து வாக்களிக்கும் அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை வாக்குகளுடன் இச் சட்டத்தின் அல்லது வேறு ஏதாவது எழுதப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மாற்றமில்லாத வகையில் பின்வரும் எல்லா விடயங்களையும் அல்லது அவற்றில் யாதாயினும் ஒன்றுக்காக முன்னர் செய்த விதிகளை தயாரித்தல் சட்டரீதியானதாக மாறும் :-

(அ) அங்கத்துவத்தை வகைப்படுத்தல், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உத்தியோகத்தர்களினால் செலுத்த வேண்டியுள்ள கட்டணங்கள், அவர்களைச் சேர்த்துக் கொள்ளல், அவர்களை விலக்கல் அல்லது கேட்டு விலகல் ;

(ஆ) நிருவாகக்குழு அங்கத்தவர்களை தெரிதல், அதிகாரிகள் பதவிகளை விட்டு விலகல் அல்லது அவர்களை பதவியிலிருந்து விலக்கல் அல்லது அவர்களது அதிகாரங்களை இல்லாமற் செய்தல், நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்காக தேவையான உப குழுக்களை நியமித்தல், மேற்படி உப குழுக்களுக்காக அங்கத்தவர் அல்லாத வேறு நபர்களின் சேவைகளைப் பெறல் மற்றும் நிருவாகக் குழுவின் பணிகளும் நடத்தைகளும் ;

(இ) நிறுவனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் ஆகியோரை நியமித்தல், அவர்களது அதிகாரங்கள், வேலைகள், பணிகள் மற்றும் நடத்தைகள் ;

(ஈ) நிறுவனத்தின் அதன் நிருவாகக்குழுவின் அல்லது யாதாயினும் உபகுழுவின் கூட்டத்தின்போது பின்பற்றவேண்டிய வேலை ஒழுங்கு, குறித்த கூட்டத்தை கூட்டுதல் மற்றும் நடாத்துதல், குறித்த கூட்டங்களில் வெற்றிடங்களை நிரப்புதல், அறிவிப்புக்களும் நிகழ்ச்சி நிரலும், கூட்டம் தொடர்பான கோரல் மற்றும் அதன் செயல்களை செய்துகொண்டு செல்லல் ;

(உ) நிருவாகக் குழுவிற்கும் நிறுவனத்தினது உறுப்பின ராவதற்குமான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(ஊ) நிறுவனத்தின் சொத்துக்களை நிருவகித்தல் மற்றும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளல்.

(2) இந்தச் சட்டம் செயற்பட ஆரம்பிக்கும் தினத்திற்கு நேர்முந்திய நாளன்று நடைமுறையிலிருந்த நிறுவனத்தின் விதிகள் இச்சட்டத்திற்கும் மற்றும் எழுத்துமூலத்திலான வேறு யாதேனும் சட்டத்தினதும், ஏற்பாடுகளுக்கு அமைவாக இல்லாதவரை நிறுவனத்தின் விதிகள் இந்த பிரமாணத்தின் 1ஆவது உப பிரமாணத்தின்கீழ் அமைக்கப்பட்ட விதியொன்றைப்போன்று அவ்வாறான கூட்டத்தின்போது அவ்வாறான விதத்தின்போது திருத்தவும் மாற்றஞ் செய்யவும் அதற்கு யாதொன்றையும் சேர்க்கவும் அல்லது நீக்கஞ் செய்யவும் முடியும்.

(3) நிறுவனத்தின் உறுப்பினர்கள் எப்போதும் நிறுவனத்தில் தற்போது நடைமுறையிலுள்ள விதிகளுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டும்.

*நிறுவனத்தால் செலுத்த வேண்டியதும் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டியதுமான கடன்கள்.*

**7.** இந்தச் சட்டம் அமுலுக்கு வருதல் ஆரம்பமாகும் திகதிக்கு நேர்முந்திய நாளில் நிறுவனத்திற்கிருந்த எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும், இதனால் கூட்டிணைக்கப்படுகின்ற கூட்டுத் தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டும் எனவும் அத்திகதியில் நிறுவனத்திற்கு பெறப்படவேண்டிய எல்லாக் கடன்களும் அறவிடப்படவேண்டிய அங்கத்துவ பணங்கள் அல்லது உதவு தொகைகள் ஒப்பப்பணங்கள் ஆகியன இந்தச் சட்டத்தின் பணிகளுக்காக கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டும்.

*அங்கத்தவர்களின் உரிமைகளை மட்டுப்படுத்தல்.*

**8**. நிறுவனத்தின் எந்த ஒரு உறுப்பினரும் நிறுவனத்தின் கடன் மற்றும் பொறுப்புக்களை விடுவிக்கும் பணிக்காகவோ வேறு யாதாயினும் பணிக்காகவோ அந்த உறுப்பினரிடமிருந்து நிறுவனத்திற்கு பெறப்பட வேண்டிய அங்கத்துவ பணத்தொகையை மீறிச் செல்கின்ற யாதாயினும் உதவுத்தொகையை செலுத்த உட்பட கூடாது.

*நிறுவனத்தால் அசையும் அசையாச் சொத்துக்களை கொள்ள முடியும்.*

**9**. யாதாயினும் கொள்வனவு, கொடை, அன்பளிப்பு, இறுதி விருப்பாவணக் கொடுப்பனவு அல்லது வேறு ஏதேனும் வகையாக அதற்கு கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்ட அசையும் அசையாத யாதாயினும் சொத்தொன்றை கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டரீதியாக நிறுவனத்திற்கு ஆற்றலும் தகுதியும் உள்ளபடியால் அந்த சொத்தை விற்பனை செய்ய, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கைமாற்ற அல்லது வேறுவகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவுள்ள முழுமையான அதிகாரத்துடன்கூடிய இந்தச் சட்டத்தின் பணிகளுக்காக நிறுவனத்தின் தற்போது அமுலில் உள்ள விதிகளுக்கு அமைவாக நிறுவனத்தால் ஏற்க வேண்டும்.

*நிறுவனத்தின் நிதியம்.*

**10**. (1) நிறுவனத்திற்கு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்திற்காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்களாக இதுவரை கிடைத்துள்ள எல்லாப் பணங்களும் மற்றும் இனிமேல் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற வங்கி ஒன்றில் அல்லது வங்கிகளில் வைப்பிலிட முடியும்.

(2) இந்த சட்டத்தின்கீழ் நிறுவனத்தின் அதிகாரங்கள், பணிகளும் கடமைகளும் அவற்றைச் செயற்படுத்தும்போதும் நிறைவேற்றும்போதும் ஏற்படும் எந்த ஒரு செலவை ஈடுசெய்யவும் தேவையான எல்லாப் பணங்களையும் குறித்த நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டும்.

(3) நிறுவனத்தின் பணம் மற்றும் சொத்துக்கள் எந்த இடத்திலிருந்து பெறப்பட்டதாயினும் அவை இங்கு குறிப்பிட்டுள்ளவாறு நிறுவனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கத்திற்காக மாத்திரமே பயன்படுத்துதல் வேண்டும்.

*கணக்குகளும், கணக்காய்வும்.*

**11.** (1) நிறுவனம் பெற்ற மற்றும் நிறுவனத்தினால் செலவழிக்கப்பட்ட எல்லாப் பணங்கள் பற்றிய சரியான கணக்குகளைப் பேண நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(2) நிறுவனத்தின் கணக்குகள் குறைந்தது ஒவ்வொரு வருடமும் பரிசீலனை செய்தலும் கணக்காய்வு செய்யப்படுதலும் வேண்டும். அதனைக் கூட்டுத்தாபனத்தினால் நியமிக்கப்படுகின்ற இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தை சேர்ந்த இணை உறுப்பினர் ஒருவரான கணக்காளரினால் அல்லது கணக்காளர்களினால் வரவு செலவு பற்றிய கணக்கும் ஐந்தொகையும் அத்தாட்சிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

*கலைக்கும்போது எஞ்சும் சொத்துக்கள்.*

**12.** நிறுவனத்தை கலைக்கும்போது அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் செலுத்தித் தீர்த்ததன் பின்னர் ஏதேனும் சொத்துக்கள் எஞ்சியிருப்பின் அதனை நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கு ஒத்த குறிக்கோள்களைக்கொண்டதும் அதன் அங்கத்தவர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்படக் கூடாது நிறுவனத்தின் விதிகளுக்கேற்ப யாதாயினும் வருமானம் அல்லது சொத்தை தனது அங்கத்தவர்கள் மத்தியில் பகிர்வதை தடைசெய்துள்ளதுமான வேறு ஒரு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்கு நிருவாகக்குழுவின் விருப்பின்படி குறித்த சொத்தை கொடுக்கவோ கைமாற்றப்படவோ முடியும்.

*நிறுவனத்தின் இலச்சினை.*

**13.** நிறுவனத்தின் இலச்சினை நிருவாகக் குழுவின் பொறுப்பில் இருக்க வேண்டும். அதனை நிறுவனத்தின் அங்கத்தவர் இருவர் முன்னிலையில் அல்லாது எந்த ஒரு ஆவணத்திலும் வைத்தல் கூடாது. மேலும், குறித்த அங்கத்தவர்கள் தாம் அங்கு சமுகமளித்தற்கு சான்றாக குறித்த ஆவணத்தில் தமது ஒப்பத்தை இட வேண்டும். அவ்வாறு கையெழுத்திடல் எவரேனும் சாட்சியாளராக கையொப்பமிடுதலுக்கும் தனித்து வேறானதாக இருத்தல் வேண்டும்.

*குடியரசினதும் ஏணையோரினதும் உரிமைகளைப் பாதுகாத்தல்.*

**14.** இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களினதும் அவர்கள்மூலம் அவர்களினால் அல்லது அவர்களின்கீழ் உரிமை கோரும் வேறு ஆட்களின் உரிமைகளுக்கு அன்றி குடியரசின் அல்லது வேறு யாதாயினும் நபர்களின் அல்லது உரிமைகளுக்கு இந்த சட்டத்தில் அடங்கும் யாதொன்றினாலும் தீங்கேதும் அல்லது செல்வாக்கு ஏற்பட மாட்டாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள அல்லது தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்